முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.12.2025) தலைமைச் செயலகத்தில், அரசு செயலாளர்களாக பதவி உயர்வு பெற்ற திருமதி இரா.லலிதா, அஜய் யாதவ், திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இரா.கண்ணன், முனைவர் ச.நடராஜன், அ.சிவஞானம், இல.நிர்மல்ராஜ், சி.அ.ராமன், ஆ.அண்ணாதுரை ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.12.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்ற ப.அப்துல் ராசிக், வி.நல்லசிவன் ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம் வடகோவை தமிழ்நாடு வனக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு வனத்துறையின் முக்கிய ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள். வனத்துறையினர், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் பார்வையிடும் வகையில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் தமிழ்நாடு வனக் காப்பகப் பதிவுகளின் சேமிப்பு மையமாக 2.60 கோடி ரூபாய் செலவில் வடிமைக்கப்பட்டுள்ள மின்னணு ஆவணக் காப்பக இணையதள சேவையினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாராளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம் வடகோவை தமிழ்நாடு வனக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு பணிகளுக்காக ஸ்போர்ட்டிங் ரைஃபிள்கள், ஆட்டோ பிஸ்டல்கள் உள்ளிட்ட படைக்கலன்களை துணை வன பாதுகாவலர், வனச் சரகர், வனவர் மற்றும் வனக் காப்பாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாராளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டம் – சாடிவயலில் ரூ.8 கோடி மதிப்பில் யானைகள் பராமரிப்பு முகாம்!

ரூ.19.50 கோடியில் - வன உயிரின இடமாற்றம் - சிகிச்சை மையம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்!

கோவை, ஜன 1 –

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் 19.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட வன உயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையம், சாடிவயலில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள யானைகள் பராமரிப்பு முகாம், 2.60 கோடி ரூபாய் செலவில் வடிமைக்கப்பட்டுள்ள மின்னணு வனஆவணக் காப்பக இணையதள சேவை ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அனைத்து துறைகளிலும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்தி தமிழ்நாட்டை இந்திய அளவில் மட்டுமல்லாது, உலக அளவிலும் முக்கிய இடம் பெறச் செய்து வருகின்றது. அதனடிப்படையில் தமிழ் நாட்டின் பல்லுயிர் பெருக்க பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமிழ் நாடு முதல மைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்.

தமிழ்நாடு பல்வகை பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மற்றும் மீன்கள் உள்ளிட்ட 5,000க்கும் மேற்பட்ட உயிரினங்களை கொண்டுள்ளது. இந்நிலையில், அதிகரிக்கும் நகரமயமாக்கல், வாழிட இழப்பு, சாலை விபத்துகள், வேட்டை மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக காயமடைந்த மற்றும் கூட்டத்தி லிருந்து பிரிந்த வனவிலங்குகள் மற்றும் மனித - வன உயிரின மோதல்களால் பாதிக்கப்படும் வனவிலங்குகளுக்கு சிகிச்சை அளித்திட மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக கோயம்புத்தூர் வனக்கோட்டம் பெத்திக்குட்டையில் 19.50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய ஒரு மாநில அளவிலான வனஉயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தில் மீட்கப்பட்ட வனஉயிரினங்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கவும் அவற்றை பாதுகாக்கவும் அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கு, 17 வனஉயிரின அமைவிடங்கள் மற்றும் முழுமையான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நம்மாநிலத்தில் வனக் குற்றங்கள் மற்றும் வனஉயிரின கடத்தல்களை தடுத்திடவும், வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பை மேம்படுத்தவும், தமிழ்நாடு வனஉயிரின குற்றத் தடுப்பு பிரிவு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

யானைகள் பாதுகாப்பில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. யானை மேலாண்மையின் அதிகரிக்கும் தேவையை உணர்ந்து கோயம்புத்தூர் மாவட்டம் சாடிவயாலில் 8.00 கோடி ரூபாய் செலவில் யானைகள் பராமரிப்பு முகாம் அமைக்கப்பட்டது.

சுமார் 200 ஆண்டுகள் பழமையான தமிழ்நாடு வனத்துறையின் முக்கிய ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் போன்ற மதிப்புமிக்க தொகுப்புகளை, ஆராய்ச்சியாளர்கள், வன அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, "தமிழ்நாடு வனக் காப்பகப் பதிவுகள் சேமிப்பு மையம் (Tamil Nadu Forest Archives Repository)" எனப் பெயரிடப்பட்டு, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக 2.60 கோடி ரூபாய் செலவில் மின்னணு ஆவணக் காப்பகமாக இணையதளத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (30.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம் வடகோவை தமிழ்நாடு வனக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வன விலங்கு பாதுகாப்பை வலுப்படுத்தி, தமிழ்நாட்டின் பல்லுயிர் பெருக்க பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் கோயம்புத்தூர் வனக்கோட்டம் பெத்திக்குட்டையில் 19.50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்ட வன உயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம் சாடிவயலில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள யானைகள் பராமரிப்பு முகாம் மற்றும் தமிழ் நாடு வனத்துறையின் முக்கிய ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள், வனத்துறையினர், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் பார்வையிடும் வகையில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் தமிழ்நாடு வனக் காப்பகப் பதிவுகளின் சேமிப்பு மையமாக 2.60 கோடி ரூபாய் செலவில் வடிமைக்கப்பட்டுள்ள மின்னணு ஆவணக் காப்பக இணையதள சேவையினை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு பணிகளுக்காக 315 ஸ்போர்ட்டிங் ரைஃபிள்கள், 9mm ஆட்டோ பிஸ்டல்கள் உள்ளிட்ட படைக்கலன்களை துணை வன பாதுகாவலர், வனச் சரகர், வனவர் மற்றும் வனக் காப்பாளர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாராளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, தமிழ்நாடு தூய்மை பணியாளர் வாரியத் தலைவர் திப்ப ம்பட்டி ஆறுசாமி, சுற்றுச்சூழல் கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், மாநகராட்சி மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வனத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இளையான்குடி அருகே சாலை கிராமத்தில்

மாநில மகளிர் கால்பந்தாட்டப் போட்டி!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்! மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, ஜன. 1–

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தெற்கு ஒன்றிய கழகம் தெற்குஒன்றிய இளைஞர் அணி சார்பில்கழக இளைஞரணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மகளிருக்கான மின்னொளி கபடி போட்டிசாலை கிராமத்தில் இளையான்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா.தனசேகரன் ஏற்பாட்டின் பேரில் இரண்டு நாட்கள் மகளிர் கபடி போட்டி நடைபெற்றது.

இந்த போட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராஜன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.எம். பொற்கோ, கே. எஸ். மஹாதீர், கிங் கார்த்தி, இ.நைனாமுகமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இளையான்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா. தனசேகரன் வரவேற்று பேசினார்.

மாநிலம் முழுவதிலுமிருந்து சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம், தஞ்சாவூர், தேனி, போடி, விருதுநகர் உள்பட்ட 20 மாவட்டங்களிலிருந்து மகளிர் கபடி வீரர்கள் பங்கேற்றார்கள்.

இந்த மகளிர் கபடிபோட்டியினை சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட் டக் கழகத் துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் பெண்களுடன் கபடி விளையாடியது அனைவரின் பாராட்டினை பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், பொதுக்குழு உறுப்பினர் த.உதயகுமார், மானா மதுரை தொகுதி பொறுப்பாளர் கே. ஆர்.என். போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்அ. முகமது, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய், நிர்வாகிகள் ரெட்சேகர், தனபால், பா. கார்த்திக், செல்வி சாத்தையா மலையரசி ரவிச்சந்திரன், வினோத், பா.சேகர், குமணன், நாகசுந்தரம், சிறுபான்மை அணி எம்.ஏ. எஸ்.இ.நாசர், கே.ராஜகுரு, கே. மருது, தனமணிகண்டன், பரமேஸ்வரன், பிரின்ஸ் கிரேசி, சேது செல்வம், சங்கரலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் வே.தமிழ்மா றன், கா .வெங்கட்ராமன் , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்து குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராஜன் இளையான்குடி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா. தனசேகரன் இ.நைனாமுகமது தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,இளம்புவனம் ஊராட்சி,பிதப்புரம் மற்றும் மாதாபுரம் உள்ளிட்ட ஊர்களில் பகுதி நேர நியாய விலைக்கடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் நவநீதக்கண்ணன், சின்னமாரி முத்து, இம்மானுவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆத்தூர் ஊராட்சி பகுதியில் புதிய நீதிமன்ற கட்டிடம்,

போக்குவரத்து பணி மனை கட்டிடம் விரைவில் அமையும்!

அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜன. 1 –

ஆத்தூர் ஊராட்சி பகுதியில் புதிய நீதிமன்ற கட்டிடம், போக்குவரத்து பணி மனை கட்டிட வசதியுடன் விரைவில் அமையும் என்று ஆத்தூரில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூட திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, நூறு வேலை திட்டத்தை முடக்க நினைக்கும் அ.தி.மு.க,, பா.ஜ.க. கூட்டணிக்கு 2026 சட்டமன்ற தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சியில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூடம் கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் மார்க் கிரரேட் மேரி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி தமிழகத்தை பழி வாங்கும் நோக்கோடு மோடி தலைமையிலான ஒன்றிய அரசு செயல்படுகிறது. நூறு நாள் வேலைத்திட்டத்தை முடக்க திட்டமிட்டு அதற்கான நிதியை மாநில அரசுக்கு தரா மல் உள்ளது. இதனால் தமிழகத்தில் குறிப்பாக கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் வறுமைக்கு தள்ளப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியின்போது 1 லட்சத்தி 20 ஆயிரம் கோடி நிதி வழங்கப்பட்டது. தற்போது 46 ஆயிரம் கோடிதான் நிதி வழங்குகிறார்கள்.

அதிலும் 12 ஆயிரம் கோடி தான் தமிழகத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இருந்தாலும் தமிழக மக்கள் நலன் கருதி முதல்வர் அவர்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்றார். அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட முதியோர் உதவித் தொகை இப்போது தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டு வருகிறது. மகளிர் உரிமைத் தொகை கிடைக்க ப் பெறாதவர்கள் மனு கொடுத்ததில் இரண்டாவது தவணையில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு மேல் மகளிர் உரிமைத் தொகை கிடைத்துள்ளது. வேலை வாய்ப்பை பொறுத்தவரை தமிழகத்திலேயே ஒரு ரூபாய் கூட வாங்காமல் அரசு பணி வழங்கிய மாவட்டமாக திண்டுக்கல் மாவட்டம் உள்ளது. குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் மட்டும் 150 ரேஷன் பணியாளர்களுக்கு பணிக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர பிற துறை பணிகளும் ஒரு ரூபாய் வாங்காமல் பணிக்கான ஆணை வழங்கப்பட்டு சாதனை படைத்துள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, உதவி பொறியாளர்கள் இராமநாதன், பாலசுப்பிரமணி, சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, வட்ட வழங்கல் அலுவலர் பிரவீணா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிந்தாமணி நாகசுந்தரம், செல்வி காங்கேயன், ஊராட்சி செயலாளர் மணவாளன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.